**.மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**அசல் வழக்கு எண்.209/2018**

PW2 – ராஜதுரை, த/பெ. கொளஞ்சியப்பன்
நாள்–23.04.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

வா.சா.ஆ.8 ஆனது புல எண்.269 க்கானது என்றால் சரிதான். நான் பணிபுரிந்த வரையில் புல எண்.269 என்பது உட்பிரிவு ஏற்படவில்லை என்றால் சரிதான். புல எண்.269 பட்டம்மாள் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா கிராமத்தில் புல எண்.269/1 என்ற உட்பிரிவு இல்லை என்றால் சரிதான். அவ்வாறு புல எண்.269/1 இருப்பதாக சொல்லியிருந்தால் அது பொய் என்றால் சரிதான். வழக்கின் வாதி தெரியும். வாதி புல எண்.269/1 தனக்கு பாத்தியப்பட்டதாக கோரி வழக்கு தாக்கல் செய்துள்ள சங்கதிகள் பொய்யானது என்றால் சரிதான்.

புல எண்.269/1 க்கு நிவாரணம் கோரியிருந்தால் அது இல்லாத புல எண்ணுக்கு நிவாரணம் கோரியதற்கு சமம் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆனது எந்த ஆவணத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டது என்றால் ஆவணத்தின் அடிப்படையில் வழங்கப்படவில்லை. வா.சா.ஆ.8 ஆனது பயிருக்கான சான்றாகதான் வழங்கியுள்ளேன் உரிமை மூலத்திற்கானது அல்ல என்றால் சரிதான். பசலி 1426 மற்றும் 1428 ஆண்டுகளில் வாதியால் பயிரடப்படவில்லை என்றால் சரிதான். யார் யாருக்கு அடங்கல் வழங்கப்பட்டுள்ளது என்பதற்கான தனியாக பதிவேடு எங்கள் அலுவலகத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறதா என்றால் இல்லை. அடங்கல் வழங்கப்படுவதற்கான பதிவேடு கிராம நிர்வாகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றும் வா.சா.ஆ.8 ஆனது அப்பதிவேட்டின் பதிவு செய்யப்படவில்லை என்பதால் அடங்கல் வழங்படுவதற்கான பதிவேடு

பராமரிக்கப்படுபவது இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பசலி 1427 ஆண்டுக்கான அடங்கலில் அன்னபூரணி த/பெ. பரமசிவம் என்பது தவறு என்றால் சரிதான். வா.சா.ஆ 8 ஆனது எந்த தேதியில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 11.03.2024-ம் தேதியாகும். அன்று தான் எனது முதல் விசாரணை வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 குறிப்பிட்டுள்ள தேதியில் வழங்கப்பட்டிருந்தால் வழக்கு தாக்கல் செய்த காலத்திலேயே வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருப்பின் என்றும் மோசடியாக வழங்கபட்டது என்பதால்தான் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 தாவா சொத்திற்கு உண்டான ஆவணமல்ல என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**